# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.
## Case No. CC.No. 109 of 2022
## Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சங்கர்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(A1, A3 Present. A2 died)**

**Dated.07.11.2025**

**முதல் விசாரணை**

நான் சரடமங்கலத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 12.11.2020ம் தேதி இரவு 10 மணியளவில் வீட்டிற்கு வெளியே உள்ள பட்டியில் ஆடுகளை கட்டிவிட்டு வீட்டில் தூங்க சென்றுவிட்டேன். இரவு 12 மணியளவில் ஆடுகளின் சத்தம் கேட்டது. உடனே எனது மனைவி ஆடுகள் சத்தம் போடுவதாக சொல்லி என்னை எழுப்பிவிட்டார். வீட்டிற்கு வெளியே சென்று ஆடுகளை பார்த்த போது ஒரு ஆட்டை காணவில்லை. காணாமல் போன எனது ஆடு கருப்பு, வெள்ளை கலந்த பெண் வெள்ளாடு ஆகும். அதன்பிறகு அக்கம் பக்கம் தேடியும், பின் கல்லகம், அழுந்தலைப்பூர் ஆகிய இடங்களில் தேடி பார்த்தோம். ஆடு கிடைக்கவில்லை. அதன் பிறகு சிறுகனூர் காவல் நிலையம் சென்று மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். மறுநாள் 13.11.2020ம் தேதி காவல் நிலையத்திலிருந்து எனக்கு

போன் செய்து வருமாறு அழைத்ததன்பேரில், நான் காவல் நிலையம் சென்று காணாமல் போன எனது ஆட்டினை போலீசாரிடம் அடையாளம் காட்டினேன். எனது ஆட்டினை பாரதிதாசன், வினோத்குமார், ஸ்ரீதர் ஆகியோர் திருடியதாக தெரிந்து கொண்டேன். ஆஜரிலுள்ள பாரதிதாசன், ஸ்ரீதர் ஆகியோர் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என தெரிந்து கொண்டேன். நான் நீதிமன்றத்தில் இடைக்கால மனு செய்து எனது ஆட்டினை பெற்றுக் கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஆட்டினை தான் நான் இடைக்காலமாக நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக் கொண்டேன். அந்த புகைப்படம் **அ.சா.ஆ.2/அ.சா.1** ஆகும். புகைப்படத்தில் உள்ள ஆடு **சா.பொ.1** ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**– இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2025.11.07 13:29:15 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி